# கட்டுப்படியாகும் சுகாதாரக்கவனிப்பு உங்களுக்கும் எனக்கும்

அரசாங்கத்தின் பெருமளவு தள்ளுபடிகளும், “3Ms” எனப்படும் மெடிசேவ், மெடிஷீல்டு, மெடிஃபண்டு திட்டங்களும் துணை புரிவதால், சிங்கப்பூரர்களால் நல்ல சுகாதாரக் கவனிப்பைக் கட்டுப்படியாகும் செலவில் அனுபவிக்க முடிகிறது. சென்ற ஆண்டு, வசதியற்ற நோயாளிகளுக்கு உதவிட மெடிஃபண்டு $50 மில்லியன் வழங்கியது. இவ்வாண்டு, ஏழைகளுக்கு உதவியாக மெடிஃபண்டு திட்டத்திற்கு இன்னும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மறுசீரமைக்கப்பட்ட மருத்துவமனைகளின் B2 மற்றும் C வகுப்பு வார்டுகளின் செலவில் 80 விழுக்காடு வரை அரசாங்கம் தள்ளுபடி செய்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? நோயாளிகள் எஞ்சிய தொகையை மட்டுமே கட்டுகிறார்கள். இதில் ஒரு பகுதியை மெடிசேவ் மற்றும்/ அல்லது மெடிஷீல்டு பயன்படுத்தி கட்டலாம்.

தள்ளுபடிகள் வசதியற்ற நோயாளிகளுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் மருத்துவமனைகளில் வருகின்ற ஜனவரி 2009 முதல் பணவசதிச் சோதனை செய்யப்படும்.

சுகாதாரக் கவனிப்புச் செலவுகள் கட்டுப்படியாகும் நிலையில் உள்ளன.

பெரும்பாலான நோயாளிகள் C வகுப்பு வார்டுகளின் 80 விழுக்காடு தள்ளுபடியையும் B2 வகுப்பு வார்டுகளின் 65 விழுக்காடு தள்ளுபடியையும் அனுபவிக்கிறார்கள்.

### நாம் நமது பங்கைச் செய்யவேண்டும்.

ஆனால் சுகாதாரக் கவனிப்பில், நாம் அனைவரும் நமது பங்கை ஆற்றுவது முக்கியம். ஆரோக்கிய வாழ்க்கைமுறையைக் கடைப்பிடித்தல், மெடிசேவ் சந்தா செலுத்துதல், பொருத்தமான, தேவைக்கேற்ற சுகாதாரக்கவனிப்பு காப்புறுதித் திட்டங்களை வாங்குதல் ஆகியவை, நமது மருத்துவச் செலவுகளைக் குறைக்க நாம் அனைவரும் செய்யவேண்டியவை. குறைந்தபட்சம், B2 மற்றும் C வகுப்பு வார்டுகளின் நிறைவாக உள்ளடக்கும் மெடிஷீல்டு காப்புறுதியாவது நாம் பெற்றிருக்கவேண்டும். நீங்கள் A மற்றும் B1 வகுப்பு வார்டுகளின் தங்க விரும்பினால் அல்லது தனியார் மருத்துவமனைக்குச் செல்ல விரும்பினால், மெடிஷீல்டோடு மெடிசேவ் அங்கீகரிக்கும் தனிப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டங்களையும் வாங்கவும். இவற்றின் பிரிமியம் அதிகமாக இருந்தாலும், நீங்கள் அதிக செலவுத்தொகையை கோர இயலும்.

## மெடிசேவில் சந்தா செலுத்தி, கவனத்துடன் பயன்படுத்தவும்

மெடிசேவ் கணக்கில் சந்தா செலுத்தி, அந்தச் சேமிப்பைக் கவனமாகப் பயன்படுத்தினால், நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் மருத்துவமனையில் தங்க நேரிடும்போது பணம் கட்ட இயலும். நீங்கள் சொந்தத் தொழில் செய்பவராக இருந்தால், மெடிசேவ் கணக்கில் வாடிக்கையாகச் சந்தாசெலுத்துவதன் மூலம், மருத்துவமனை கட்டணத்தைப் பற்றி கவலைப்படாமல், உடல்நலம் தேறுவதில் கவனம் செலுத்தலாம்.

உங்கள் மனைவியின் மெடிசேவ் கணக்கில் பணம் போட்டால் - குறிப்பாக அவர் முழுநேர குடும்பத் தலைவியாக இருந்தால் - நீங்கள் ரொக்கமாகக் கட்டும் தொகையையும் அதன்வழி உங்கள் மருத்துவமனை கட்டணத்தையும் குறிப்பிடத்தக்க அளவு குறைக்க உதவும்.

சராசரியாக, ஒவ்வொரு சிங்கப்பூரரின் மெடிசேவ் கணக்கிலும், 10 முதல் 11 முறை C மற்றும் B2 வகுப்பு வார்டுகளின் தங்குவதற்குப் போதிய அளவு சேமிப்பு இருக்கும். புற்றுநோய், தீராத நோய்கள் போன்றவற்றுக்கான வெளி நோயாளி சிகிச்சைக்கும் மெடிசேவ் உபயோகம் நீட்டிக்கப்பட்டுள்ளது.




## சரியான காப்புறுதி காப்பீடு வாங்கவும்

மருத்துவமனையில் தங்கும் செலவு பற்றிய கவலையைப் போக்க சுகாதாரக் காப்புறுதி உதவும். கட்டுப்படியாகும் அடிப்படை மருத்துவக் காப்புறுதித் திட்டமான மெடிஷீல்டு, B2 மற்றும் C வகுப்பு வார்டுகளின் பெருந்தொகை கட்டணங்களுக்குக் காப்பீடு வழங்குகிறது. இதன் பிரிமியத்தை மெடிசேவ் சேமிப்பைக்கொண்டு கட்டலாம்.

நீங்கள் A, B1 வகுப்பு வார்டுகளின் அல்லது தனியார் மருத்துவமனைகளை விரும்பினால், அடிப்படை மெடிஷீல்டு காப்பீட்டுக்கு அப்பால் கூடுதல் காப்பீடு வழங்கும் மெடிசேவ் அங்கீகரிக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட காப்புறுதித் திட்டங்களை வாங்குவது உங்களுக்குப் பொருத்தமாக அமையும்.

காப்புறுதி நீண்டகாலத்திற்குரியது என்பதால், பிரிமியம் உங்களுக்குக் கட்டுப்படியாகுமா என்பதைக் கவனத்தில் கொள்ளவும். உங்களைச் சார்ந்திருப்பவர்களுக்கும் காப்புறுதி இருப்பதை உறுதிப்படுத்தவும். பிள்ளைகளுக்கான அடிப்படை மெடிஷீல்டு காப்பீடு ஆண்டுக்கு $33 தான்.

பெற்றோரின் மெடிசேவ் கணக்கிலிருந்து இத்தொகையைக் கழித்துக் கொள்ளலாம். உங்கள் பிள்ளைகளுக்கு மெடிஷீல்டு வாங்குவதால், அவர்கள் நோய்வாய்ப்படுவதற்கு முன்பாகவே காப்புறுதி பெற்றிருப்பார்கள்.




## சரியான வகுப்பு வார்டைத் தேர்ந்தெடுக்கவும்

பொது மருத்துவமனைகளில், சிங்கப்பூரர்கள் அனைவரும் வகுப்பு வார்டு C முதல் வகுப்பு வார்டு A வரை, வெவ்வேறு தள்ளுபடி மற்றும் விலை நிர்ணயங்களுடன் தேர்ந்தெடுக்கலாம்.

உங்கள் தேவைகளையும் வளங்களையும் கருத்தில் கொண்டு, வகுப்பு வார்டைக் கவனமாகத் தேர்ந்தெடுக்கவும்.

உயர் வகுப்பு வார்டுகளை நீங்கள் விரும்பினால், நீங்கள் தேர்ந்தெடுக்கும் வகுப்பு வார்டுக்கு உங்கள் காப்புறுதி காப்பீடு பொதுமானதாக இருக்குமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

நீங்கள் எந்தப் வகுப்பு வார்டில் இருந்தாலும், நல்ல மருத்துவக் கவனிப்பைப் பெறுவீர்கள்.

உங்களுக்கு நிதி உதவி தேவைப்பட்டால் மருத்துவச் சமூகச் சேவையாளரை (MSW) பார்க்கவேண்டுமென கேளுங்கள்.




மேலும் விவரங்களுக்கு, www.moh.gov.sg இணையத்தளத்தைப் பார்க்கவும்

MINISTRY OF HEALTH
SINGAPORE